செ. கு. எண்: 049 நாள் :26.07.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 26.7.2015

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், ஓவேலி கிராமம், சீபுரத்தைச் சேர்ந்த திரு. மாதன் என்பவர் 10.5.2015 அன்று தனது வீட்டினருகே காட்டு யானை தாக்கியதில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 17.5.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கல்லம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெள்ளன் என்பவரின் மகன் நஞ்சன் 11.5.2015 அன்று கல்லம்பாளையம் பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், அய்யூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரப்பன் என்பவரின் மகன் ஈராப்பா 16.5.2015 அன்று காப்புக் காட்டில் காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காலனிப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. காளியப்பன் என்பவர் 16.5.2015 அன்று பெரியநாயக்கன்பாளையம் வனச்சரகம், காலனிப்புதூர் சரகப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த மாதன், நஞ்சன், ஈராப்பா மற்றும் காளியப்பன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**